பகவத் பாதை

BAGAVATH PATHAI

தமிழ் மாத இதழ்

மலர்-4 | இதழ்-8 | அக்டோபர் 2017 | வருடச்சந்தா ரூ. 100/- | Volume-4 | Issue - 8 | October 2017 | Annual subscription Rs, 100/-



இலக்கை
நோக்கிய
டென்சன்

பகவத் பாதை

தமிழ் மாத இதழ்



"இலக்கை நோக்கிய நமது முயற்சி நமக்கு டென்சனை ஏற்படுத்திவிட்டதாக வைத்துக் கொள்வோம். நமது கவனம் செய்யவேண்டிய செயலின் பக்கம் திரும்பும்போது அந்த டென்சனும் செயலுக்கு தூண்டுகோலாக அமையும். ஆனால் நமது கவனம் "நமக்கு எப்படி டென்சன் வரலாம்" என டென்சனுக்கு எதிராக டென்சன் ஆவதுதான் தவறானது. நமக்கு ஏற்பட்ட டென்சனை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்வதே அகச்சரணாகதி. இலக்கை நோக்கி நாம் எதிர்கொள்ளும் அவ்வப்போதைய நிகழ்கால நிகழ்வுடன் இணைத்துக்கொள்வது நமது புறச் சரணாகதியாக அமைகிறது. இந்த சரணாகதி அணுகுமுறையே நம்மை நமது இலக்கை நோக்கி எளிதாக இட்டுச்செல்கிறது"

- ஸ்ரீ பகவத்



சென்னையில் நவம்பரில் 2 நாள்

ஞான முகாம்

உள்ளே

கூடுதல் தகவல்களைப் பெற விரும்புகிறீர்களா? அல்லது பாதையை நண்பர்களுக்கு அனுப்ப விரும்புகிறீர்களா?



Sri Bagavath Mission

31, Ramalingasamy Street, Ammapet,
Salem - 636 003. Tamilnadu India

V.A.P. SHARAVANAN - 99942 05880
Dr. N. KAILASAM - 94432 90559
K.S.SJEEVAMANI - 97891 65555

www. pravaagam.org www.sribagavath.org
E-mail : sribagavathmission@gmail.com

This book Designed by
SRI SIDDHASH GRAPHICS, Salem.
Cell : 90926 46260, 86800 06868

ஸ்ரீ பகவத் ஐயா அவர்களின் இரண்டு நாள் ஞான முகாம் வருகின்ற **நவம்பர் மாதத்தில்** சென்னையில் நடைபெற உள்ளது.

இடம் : **சீனிவாச சாஸ்திரி அரங்கம்** A/c,
40, லங் சர்ச் ரோடு, மைலாப்பூர்.

நாள் : நவம்பர் 11.11.2017 முதல் 12.11.2017 வரை

நேரம் : சனி காலை 9.30 மணிமுதல் 1.00 மணிவரை
ஞாயிறு காலை 9.30 மணிமுதல் 1.00 மணிவரை

ஞான முகாமில் கலந்து கொள்பவர்கள் உங்கள் வருகையை முன் அறிவிப்பு செய்யுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

செலவு பகிர்வு
ரூ.500/-
நபர் ஒருவருக்கு

மேலும் நன்கொடைகள் வரவேற்கப்படுகின்றன.

அனைவரும் வருக! ஞானத்தெளிவு பெறுக...

முன்பதிவிற்கு


திரு. **இரவிச்சந்திரன்**
94444 02986

திரு. **பாலசுந்தரம்**
99405 34355

திருமதி **முத்துலட்சுமி**
95512 53636

திரு. **விபாகரன்**
99405 02239





இலக்கை நோக்கிய டென்சன்

- ஸ்ரீ பகவத்

"எனது நிறுவனத்தில் நான் செய்து முடிக்க வேண்டும் என்று ஒரு குறியீட்டு இலக்கை நிர்ணயம் செய்கிறார்கள். குறிப்பிட்ட கால அவகாசத்துக்குள் நான் அந்த இலக்கை அடைந்து விட வேண்டும். ஓர் உதாரணம் கூற வேண்டுமானால் நான் ஒரு மாத கால அவகாசத்துக்குள் எனது நிறுவனத்துக்காக எனது குழுவின் சார்பில் ஐந்து கோடி ரூபாய் மதிப்புள்ள வியாபாரத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். எனது குழுவில் இருபது உறுப்பினர்கள் இருக்கிறார்கள்...

"நான் அவர்களுக்கு வேலையைப் பிரித்துக் கொடுத்து அவர்களது வேலையைக் கண்காணிக்க வேண்டும். அவர்களுக்கு வழிகாட்டவும் வேண்டும். நாங்கள் அனைவருமாகச் சேர்ந்து ஒரு மாத காலத்துக்குள் இந்தக் குறியீட்டு இலக்கை எட்ட வேண்டும்...

"இதற்கு எனது குழுவிலுள்ள அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். சமுதாயத்தின் சூழ்நிலையும் மார்க்கெட்டும் இதற்குச் சாதகமாக அமைய வேண்டும். நாங்கள் எவ்வளவு தான் சாமர்த்தியமாகத் திட்ட மிட்டாலும் ஏறுக்குமாறான சூழ்நிலைகள் ஏற்பட்டு எங்கள் முன்னேற்றத்தை முறியடித்து விடுகின்றன...

"இதனால் நாங்கள் எப்போதும் டென்சனுடன்தான் இருந்து கொண்டிருக்கிறோம். எங்களைப் போன்ற பலா் பல நிறுவனங்களிலும் இருக்கின்றனா். அவா்கள் அனைவருமே இதைப் போன்ற பிரச்சினையைச் சந்திக்கின்றனா். நாங்கள் எங்களுடைய பிரச்சினையை எதிர்கொள்வது எவ்வாறு?"

- இப்படி ஓர் அன்பர் கேட்டு முடித்தார்.

இப்படி அவர் தனது பிரச்சினையை விரிவாகவே எடுத்துக் கூறிவிட்டார். இது அவர் மட்டும் எதிர்கொள்ளும் பிரச்சனையாக இல்லாமல் பலரும் எதிர்கொள்ளும் ஒரு பொதுப் பிரச்சனை என்றே கூறி விட்டார்.

இப்படி எல்லா துறைகளிலுமே இலக்கு என்ற ஒன்று நமக்கு நெருக்கடி கொடுத்து வருகிறது.

இந்த நெருக்கடியை எவ்வாறு எதிர்கொள்வது?

இலக்குகளை எவ்வாறு எதிர் கொள்வது ?

தெனாலிராமன் பூனை வளர்த்த கதையைக் கேள்விப்பட்டிருப்பீர்கள். எல்லோரும் பூனை வளர்க்க வேண்டும். மாதக்கடைசியில் அதை மன்னரிடம் காட்ட வேண்டும்.

இது அரச கட்டளை. பூனைக்கான பால் இலவசமாக அரசாங்கத்தால் வழங்கப்படும்.

எல்லோரையும் போல் தெனாலிராமனுக்கும் அவர் வளர்ப்பதற்காகப் பூனைக்குட்டி ஒன்று கொடுக்கப்பட்டிருந்தது. தினசரி பாலும் வழங்கப்பட்டு வந்தது.

மாதக் கடைசியில் அரசப்பிரதானிகள் அனைவரும் பூனைக்குட்டிகளுடன் அரசன் முன்னிலையில் ஆஜரானார்கள்.

தெனாலிராமனும் ஆஜரானார். அனைவரது பூனைக்குட்டிகளும் நன்றாகப் பாலைக் குடித்து விட்டு கொழு கொழுவென்று அழகாக இருந்தன.

ஆனால் தெனாலிராமனுடைய பூனைக்குட்டி மாத்திரம் எலும்பும் தோலுமாகக் காட்சியளித்தது.

அதைப் பார்த்த அரசர் கோபம் கொண்டார். தெனாலிராமனைக் கடிந்துக் கொண்டார்.

"பால் சாப்பிடாத பூனைக்குட்டியை எனது தலையில் கட்டி விட்டார்கள் மன்னா" என்று தெனாலிராமன் முறையிட்டார்.

"பூனை எப்படி பால் சாப்பிடாமல் இருக்கும்?" என மன்னர் மேலும் கோபமடைந்தார்.

சோதனை செய்யப்பட்டது. பாலைக் கண்டதும் ராமனுடைய பூனைக்குட்டி பயந்து ஓடியது.

மன்னரும் சமாதானமடைந்தார்.

நடந்தது என்னவென்று உங்களுக்குத் தெரிந்திருக்கலாம்.

பூனை வளர்க்கும்படி கூறியது ராமனுக்குப் பிடிக்கவில்லை. ஆகவே அவர் அந்தப் பூனைக்குட்டிக்கு பாலை கொதிக்கக் கொதிக்க ஊட்டினார். பூனைக்குட்டியின் வாய் வெந்து விட்டது. பாலைக் கண்டாலே ஓட்டம் பிடிக்க ஆரம்பித்தது.

- இப்படி நாம் வெற்றியடையாமல் போனதற்குக் காரணம் கற்பிப்பது என்பது ஒருமுறை.

ஆனால் வெற்றியை நோக்கிப் பயணிப்பது எவ்வாறு - இலக்கை நோக்கிப் பயணிப்பது எவ்வாறு என்பதையே நாம் இங்கு ஆய்வுக்கு எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

இதைப் போன்ற ஒரு பிரச்சினையை இன்னுமொரு அன்பர் எதிர் கொள்ள நேர்ந்தது. அது குறித்து அவர் என்னிடம் கேள்விகள் கேட்டார்.

"உங்களுடைய நூல்கள் படித்ததால் என் மனம் மிகவும் அமைதி அடைந்து விட்டது. உங்களுடைய கருத்துகளையெல்லாம் நான் நன்றாகப் புரிந்து கொண்டு விட்டேன் என நான் நம்பிக்கை கொண்டிருந்தேன். ஆனால் இன்று அதற்கு ஒரு சோதனை வந்து விட்டது...

"நான் 30 கிலோ மீட்டருக்கு அப்பாலுள்ள ஓரிடத்தில் நடக்கும் கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டிய அவசியம். அது மிக முக்கியமான கூட்டம். ஒன்றரை மணி நேரமாக பஸ்ஸிற்காக காத்திருக்கிறேன். ஒரு பஸ் கூட வரவில்லை. இனி ஏதாவது பஸ் வந்தால் கூட அதில் ஏற முடியாத அளவு கூட்ட நெரிசலாக இருக்கும். எனக்கு ஒரே டென்சனாக இருக்கிறது. உங்கள் கருத்துக்களைப் புரிந்து கொண்ட எனக்கு இப்படி டென்சன் ஏற்படலாமா?"

- இப்படி அவர் கேட்டு முடித்தார்.

அவருக்குப் பின்வருமாறு பதில் கொடுக்கப்பட்டது.

"நீங்கள் முக்கியமான பணியை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறீர்கள். அதில் ஏற்படும் தடங்கல் உங்களுக்கு டென்சன் ஏற்படுத்துகிறது. அப்படித் தடங்கல் ஏற்பட்டும் உங்களுக்கு டென்சன் ஏற்படவில்லையென வைத்துக்கொள்வோம். என்ன செய்வீர்கள். நீங்கள் அந்தக் கூட்டத்துக்குச் செல்லாமல் கூட்டத்தையே கூட புறக்கணித்துவிட நேர்ந்திடலாம்...

"உண்மையில் உங்களுக்கு ஏற்படும் டென்சன்தான் உங்களை அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு ஒரு தூண்டுதலாக அமைந்துள்ளது. அந்தத் தூண்டுதல் இருக்கும் பட்சத்தில் பஸ்சைக் கூடப் புறக்கணித்து விட்டு வேறு ஏதாவது ஒரு தனி வாகனத்தையே ஏற்பாடு செய்து கொள்ளலாம்...

"கூட்டம் நடக்கும் இடத்துக்கு எப்படிப் போகலாம் என நீங்கள் சிந்திப்பீர்களானால் நீங்கள் உங்கள் கவனத்தை நீங்கள் செய்ய வேண்டிய செயலின் மீது செலுத்துவதாக அர்த்தம். அப்படிச் செய்யாமல் எனக்கு எப்படி டென்சன் வரலாம் என உங்கள் கவனத்தை டென்சன் மீது செலுத்துவது என்பது புறச்செயலை புறக்கணித்துவிட்டு நீங்கள் அகத்தை நோக்கி திரும்பிவிட்டதாகத்தான் அர்த்தம்...

"கூட்டத்துக்குப் போக முடியவில்லையே என டென்சன் ஆவது நியாயமானது; இயற்கையானது. ஆனால் எனக்கு எப்படி டென்சன் வரலாம் என டென்சனுக்கு எதிராக டென்சன் ஆவதுதான் தவறானது."

இங்கு அந்த அன்பரின் செயல்பாடு எப்படி அமைந்துள்ளது?

கூட்டம் நடக்கும் இடத்தை அடைவது அவரது இலக்கு. அங்கு செல்ல முடியாதபடி தடை ஏற்படும் போது அவருக்கு டென்சன் ஏற்படுகிறது.

இப்படி நாம் எந்த இலக்கை எடுத்துக்கொண்டாலும் அதை நோக்கிய நமது பயணத்திற்கு ஏற்படும் தடைகள் அனைத்தும் நமக்கு டென்சனை ஏற்படுத்துவது இயற்கையான நிகழ்வே.

இப்போது நமது கேள்வி என்ன?

இப்போது நாம் செய்ய வேண்டுவது என்ன?

நம் அணுகுமுறை எவ்வாறு இருக்க வேண்டும்?

டென்சன் இல்லாமல் நாம் நமது பயணத்தில் ஈடுபட வேண்டும் என்பதுதான் நமது நோக்கமா?

அல்லது இலக்கை நோக்கி நமது கவனத்தை திருப்பினால் போதும் என்பது நமது நோக்கமா?

டென்சன் இல்லாமல் செயல்படவேண்டும் என்ற முடிவுக்கு வருவோமானால் நம்முடைய கவனம் செயலை இரண்டாம் பட்சமாக்கிவிட்டு நமது மனோ அனுபவங்களுக்கு முதலிடம் கொடுக்கும் நிலைக்கு வந்து விடுகிறோம்.

நமது கவனம் நமது செயலை நோக்கி இருக்க வேண்டுவதுதான் சரியானது.

நாம் நமது செயலை நோக்கி நமது கவனத்தை எவ்வாறு வைத்துக்கொள்வது?

நாம் நமது பைக்கில் சென்று கொண்டிருக்கிறோம். நாம் பயணம் செய்யும் ரோடு நமது கண்களுக்கு தெரிகிறது. 100 மீட்டர் தூரத்தில் நாம் இடது பக்கமாக பிரிந்து செல்ல வேண்டும். பிரிந்து செல்லும் சாலைக் கூட நமது கண்களுக்குத் தெரிகிறது.

இப்போது நாம் என்ன செய்ய வேண்டும்? இடதுபக்கம் திரும்ப வேண்டுமா?

100 மீட்டர் வரும்வரை நாம் நேராகத்தான் செல்ல வேண்டும். அதுவரை நாம் இடது பக்கம் வண்டியை திருப்பக் கூடாது.

இப்படி நாம் எந்த இலக்கை கையில் எடுத்துக்கொண்டாலும் நாம் உடனடியாக செயல்படவேண்டிய செயல் ஒன்று உள்ளது.

அதுதான் நாம் எதிர்கொள்ளும் செயல். நமது கவனத்தின் பிரதானமான பகுதி. நாம் எதிர்கொள்ளும் செயலின்மீதுதான் அமைந்திருக்கவேண்டும்.

நாம் நமது ஈடுபாட்டையும் கவனத்தையும் நாம் எதிர்கொள்ளும் செயலின் மீது வைத்திடும் போது, அதுவே நம்மை நமது இலக்கை நோக்கி அழைத்துச் செல்கிறது.

அது மட்டுமல்லாமல் அது நமது கவனத்தை நமது டென்சன் மீதிருந்தும் மீட்டெடுக்கிறது.

இலக்கை அடைவதற்காக இலக்கை புறக்கணிக்கவும் கற்றுக்கொள்ளவேண்டும்.

இலக்கை நோக்கிய நமது முயற்சி நமக்கு டென்சனை ஏற்படுத்தி விட்டதாகவே வைத்துக்கொள்வோம்.

இந்த டென்சன் என்பது என்ன?

நமக்கு ஏற்பட்ட ஒரு வேண்டாத உணர்ச்சியாக இதனைக் கருதுகிறோம்.

ஆனால் அதுவல்ல உண்மை. டென்சன் ஏற்பட்டிருப்பது பொய்யல்ல. அது ஒரு நடைமுறை உண்மைதான். அதில் எந்த சந்தேகமும் கிடையாது.

ஆனால் அது எனக்கு ஏற்பட்ட டென்சனாக அதை நாம் கருதுவதுதான் முரண்பாடுடையது.

உண்மையில் அந்த டென்சனே தன்னை ஓர் 'அனுபவிப்பவனாகவும்' கருதிக்கொள்கிறது.

அனுபவமே தன்னை அனுபவிப்பவனாக எடுத்துக்கொள்கிறது.

அங்கு அனுபவம் - அனுபவிப்பவன் என்ற இரண்டு தன்மையுள்ள நிலை எதுவும் கிடையாது.

ஒரே ஒரு அனுபவமே தன்னை இரண்டாகக் காட்டிக்கொள்கிறது.

அனுபவத்திலிருந்து - டென்சன்களிலிருந்து விடுபட எடுக்கும் அனைத்து முயற்சிகளும் இந்த இரட்டைத்தன்மையையே வலுப்படுத்திவிடுகிறது.

ஆனாலுங்கூட அந்த இரட்டை தன்மைக்கூட ஒரு நிதர்சனமான உண்மையாகவே தோற்றமளிக்கிறது.

நமக்கு ஏற்படும் டென்சனை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்வதே அந்த இரட்டைத்தன்மையை நீக்குகிறது. இது அகச் சரணாகதியாக அமைகிறது.

இலக்கைப் புறக்கணித்து நாம் எதிர்கொள்ளும் அவ்வப்போதைய நிகழ்கால நிகழ்வுகளுடன் இணைத்துக்கொள்வது நமது புறச்சரணாகதியாக அமைகிறது.

இந்தச் சரணாகதி அணுகுமுறையே நம்மை நமது இலக்கை நோக்கி எளிதாக இட்டுச்செல்கிறது.



ஸ்ரீ பகவத் பவன்

ஸ்ரீ பகவத் மிஷன் குடும்ப உறுப்பினர்கள் அனைவருக்கும் வணக்கம்.

நமது ஸ்ரீ பகவத் ஐயா அவர்களின் அருட்கருணையினாலும் அவரால் ஞானத் தெளிவு பெற்ற நம் எல்லோருடைய ஒட்டுமொத்த பிரார்த்தனையாலும் நமது பகவத் பவனை சுற்றியுள்ள மலைப்பகுதியில் கன மழையை வாரி இறைத்திருக்கிறது இயற்கை.

இது நம் அனைவரின் கண்களுக்கு குளிர்ச்சி அளிப்பதாகவும் மன நிறைவை தருவதாகவும் அமைந்துள்ளது. மேலும் நமது ஸ்ரீபகவத் பவனின் செயல்பாடுகள் மிகச்சிறப்பாக நடைபெற்று வருகிறது. ஐயாவை சந்தித்து உரையாடி தெளிவு பெற பலரும் வந்த வண்ணம் உள்ளனர். வருபவர்கள் தங்குவதற்கான வசதியும் அவர்களுக்கான உணவும் சிறந்த முறையில் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. மேலும் ஒவ்வொரு மாதமும் ஞான முகாம் கட்டணமின்றி இலவசமாக நடந்து வருகிறது. ஸ்ரீ பகவத் மிஷனுக்கு வரும் நன்கொடைகளையும் நிறுவனர்கள் மற்றும் புரவலர்களின் பங்களிப்பையும் கொண்டு மட்டுமே அனைத்து செலவுகளையும் எதிர் கொண்டு வருகிறோம்.

பகவத் ஐயாவின் கருத்துகளை புரிந்து கொண்டவர்களும் அனைவருக்கும் எடுத்துச் செல்ல வேண்டும் என்ற ஆர்வமுள்ளவர்களும் வாய்ப்புள்ளவர்களாக இருக்கும் பட்சத்தில் நன்கொடைகளை வழங்கி நிறுவனர்களாக இணைந்து ஸ்ரீ பகவத் மிஷனின் தொண்டில் தங்களையும் இணைத்துக் கொள்ளுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இப்படிக்கு





V.A.P. **சரவணன்** (சேலம்)
செல் : 99942 05880

கேள்வி? பதில்...

எனக்கு கீழே வேலை பார்ப்பவர்களின் செயலால் எனக்கு மனக்கொதிப்பு ஏற்படுகிறது. இதனால் என் உடல் நிலை பாதிக்கிறது. என் சூழ்நிலையை எப்படி எதிர்கொள்வது?

கேள்வி :

நான் ஒரு சிவில் இன்ஜினியர். என்னுடைய நடைமுறை பிரச்சனைக்கு தீர்வு காண இந்த கேள்வியை கேட்கிறேன். கடந்த ஒரு வருட காலமாகவே தொழில் ஒரு மந்த நிலையில் இருக்கிறது. தொழில் செய்வதே மிகவும் கஷ்டமாக இருக்கும் இந்த சூழ்நிலையில் எனக்கு கீழே வேலை பார்க்கும் மேஸ்திரி, எலக்ட்ரீசியன், பிளம்பர், கார்பெண்டர், பெயிண்டர் என அனைவரும் தாங்கள் பேசிய தொகைக்கு கூடுதலாக பணத்தை ஏதாவது ஒரு காரணத்தை சொல்லி பெற்றுக் கொள்கிறார்கள். கட்டிடத்தின் வேலை முடிவில் எனக்கு கிடைக்க வேண்டிய லாபம் கிடைக்காமலும், சில நேரங்களில் என்னுடைய சொந்த முதலீட்டிலிருந்து சிறுபகுதியைக்கூட இழக்க வேண்டி இருக்கிறது.

இப்படியே தொடர்ந்து ஏற்படுவதினால் அவர்கள் மேல் அதிகப்படியான மனக்கொதிப்பு ஏற்படுகிறது. எனக்கு ஏற்படும் மனக்கொதிப்பை அவர்கள் மேல் காட்டிவிடுவதால் என்னுடைய அடுத்த வேலைக்கு வராமல் வேறு எங்காவது வேலைக்கு சென்று விடுகிறார்கள். இவர்கள் ஏற்படுத்தும் மனக்கொதிப்பு என்னுடைய உடல் நிலையையே கெடுத்து விடுகிறது. இரவில் தூக்கம் இன்றி தவிக்கிறேன்.

என்னை நானே ரிலாக்ஸ் செய்துகொள்ள தினமும் கொஞ்சம் மது அருந்திக் கொள்கிறேன். இது நிரந்தரமான தீர்வு இல்லை என்று தெரிந்தாலும் கூட எனக்கு வேறு வழி தெரியவில்லை. வேறு எங்காவது வேலைக்கு சென்று விடலாமா என்று தோன்றுகிறது. என்னுடைய யதார்த்த சூழ்நிலையை எப்படி எதிர்கொள்வது?

பதில் :

இன்றைய நம்முடைய நடைமுறை வாழ்வில் போட்டி, பொறாமை, நயவஞ்சகம், திருட்டு, ஏமாற்றுதல், துரோகம், பொய் போன்ற சமுதாய அவலங்களுக்கு இடையே தான் நாம் வாழ்க்கையை வாழ வேண்டியுள்ளது. சமுதாயத்தில் மேற்சொன்ன அவலங்கள் மலிந்து இருக்கின்றன என்பதற்காக நாமும் அவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமா? மேற்சொன்ன அவலங்களிலிருந்து நம்மை நாம் பாதுகாத்து கொண்டு ஏமாற்றமடையாமல் திறம்பட வாழும் அறிவை நாம்தான் வளர்த்துக்கொள்ள வேண்டும். இப்போது இருக்கும் நடைமுறை சிக்கல், பொருளாதாரத்தில் தேக்க நிலை என்பது பொதுவாக எல்லாவிதமான தொழில் துறையிலும் இருக்கத்தான் செய்கிறது. இந்த ஒட்டுமொத்த சூழ்நிலைகளை நம் ஒருவரால் மட்டும் மாற்றிட முடியாது. ஆனாலும் நம்மால் எவ்வளவு திறம்பட புத்திசாலி தனமாக செயல்பட்டு நம்மை பாதுகாத்து கொள்ள முடியுமோ அந்த அளவுக்கு காத்து கொள்வது என்பது ஒன்று மட்டும் தான் நம் கைவசம் உள்ளது.

இப்போது நாம் சிவில் இன்ஜினியரின் சூழ்நிலையை எப்படி எதிர்கொள்வது என பார்ப்போம்.

சிவில் இன்ஜினியருக்கு மனக்கொதிப்பு ஏற்பட காரணம் அவருக்கு கீழே வேலை பார்ப்பவர்கள் பேசிய தொகைக்கும் அதிகமாக பணம் பெற்று கொண்டும், அதனால் கிடைக்க வேண்டிய லாபம் போய் முதலீட்டில் ஒரு பகுதி இழக்கும் நிலைக்கும் போய் விடுகிறார். இதனால் தனக்கு ஏற்பட்ட மனக்கொதிப்பை எப்படி எதிர்கொள்வது என்பது தெரியாமல் மனக்கொதிப்பை பற்றி பிடித்து கொண்டு சிந்திக்கத் தொடங்கி விடுகிறார்.

'நான் ஏமாறி விட்டேன்' என்று மனதில் தோன்றும் எண்ணம் உடலில் மனக்கொதிப்பு உணர்வாக வெளிப்படுகிறது. மனக்கொதிப்பைத் தொடர்ந்து சிந்திப்பதால் இரவு நேரத்தில் தூக்கம் குறைந்து விடுகிறது. தூக்கம் தொடர்ந்து குறைவதாலும் உடலும் கெட்டுவிடுகிறது.

தன்னுடைய மனக்கொதிப்புக்கும், உடல் நிலை கெட்டுப்போனதற்கும் தனக்கு கீழே வேலை பார்ப்பவர்கள் தாம் காரணம் என்று அவர்களின் மீது நேரடியாக மனக்கொதிப்பை கோபமான வார்த்தைகளாக வெளிபடுத்திவிடுகிறார். அதனால் அவர்களும் இன்ஜினியரை புறக்கணித்துவிட்டு வேறு இடத்தில் வேலைக்கு சென்று விடுகிறார்கள். தனக்கு ஏற்பட்ட மனக்கொதிப்பு தொடர்ந்து நீடிப்பது அவருக்கு பிடிக்கவில்லை.

தான் ரிலாக்ஸ் ஆக இல்லை என்பது அவருக்கே தெரிகிறது. தன்னுடைய மன ரிலாக்சுக்காக மது அருந்துவது தவறு என்பது தெரிந்தும் வேறு வழி

தெரியாமல் மது அருந்தி ரிலாக்ஸ் செய்து கொள்வதாக கூறுகிறார். இதற்கு மேலும், தன்னால் சரியாக தொழிலைப் பார்க்க முடியவில்லையே என்ற மன ஆதங்கத்தால் ’வேறு எங்காவது வேலைக்கு சென்று விடலாமா’ என்று எண்ணும் அளவிற்கு சென்று விடுகிறார். மேற்கொண்டு என்ன செய்வது என்று தெரியாமல் தடுமாறும் நிலைக்கு போய்விடுகிறார். இதற்கு முழு காரணம் மனதில் ஏற்படும் "மனக்கொதிப்பை" எப்படி எதிர்கொள்ள வேண்டும் என்பது தெரியாமை மட்டுமே.

சரி மனக்கொதிப்புக்கு நாம் என்ன தீர்வு சொல்லப் போகிறோம். புற நிகழ்வுகளினால் இன்ஜினியருக்கு மனதில் ஏற்பட்ட மனக்கொதிப்புக்கு எதிராக மனதில் நாம் எதுவும் செய்யத்தேவையில்லை, செய்யவும் முடியாது என்பது தான் தீர்வு. மனதில் ஏற்பட்ட மனக்கொதிப்புக்கு மனதின் மூலமே ஒரு போதும் தீர்வு காண முடியாது என்பது தான் புரிதலே. மனதில் எற்பட்ட மனக்கொதிப்புக்கு, அதற்கு காரணமான தனக்கு கீழே வேலை பார்ப்பவர்களிடம் ஏமாறாமல் இனி எப்படி கவனமாக வேலை பார்க்க வேண்டும் என்பதை சிந்தித்து அதற்கு என்ன என்ன புதிய வழிமுறைகள் உள்ளனவோ அதை கையாள வேண்டும். இப்படி செயல்படுவது தான் மனக்கொதிப்பை எப்படி புறத்தில் வளர்ச்சிக்கு தூண்டுகோலாக எடுத்து பயன்படுத்துவது என்பது ஆகும்.

புற நிகழ்வுகளினால் ஏற்படும் மனப்பாதிப்பாக இருந்தாலும், பழைய பதிவுகளினால் ஏற்படும் மனப்பாதிப்பாக இருந்தாலும், இப்படி அகம், புறம் என்று எந்த வகையில் மனபாதிப்பு ஏற்பட்டாலும் அனைத்திற்கும் ஒரே தீர்வுதான்.

மனதில் தான் மனக்கொதிப்பு ஏற்படுகிறது. அதே மனதை பயன்படுத்தி மனக்கொதிப்பை தீர்வு செய்ய நினைப்பது தான் தவறு. மனக்கொதிப்புக்கு தீர்வு செய்ய வேண்டியது மனதில் இல்லை. மாறாக அந்த மனக்கொதிப்பு ஏற்படுவதற்கு புற காரணமான தனக்கு கீழே வேலை பார்ப்பவர்களிடம் இனி எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்ற பகுதியே மிகவும் முக்கியமானது ஆகும்.

நமக்கு மனதில் பாதிப்பு ஏற்படுகிறது என்றால் அதற்கு காரணமான புற விஷயத்தில் தான் தீர்வுகாண வேண்டும். நமது வேலையில் கவனம் குறைவாக இருப்பதால் தான் மனப்பாதிப்பை ஏற்படுத்துகிறது. நமக்கு மனப்பாதிப்பே ஏற்படவில்லை என்றால் நாம் நம்முடைய மொத்த முதலீட்டையுமே இழந்துவிடுவோம். நமக்கு ஏற்படும் மனப்பாதிப்பின் பொருள் என்ன என்றால் ’புறத்தில் கவனமாக வேலையைப் பார்’ என்பதை மனம் வலியுறுத்துவதாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

உதாரணமாக பள்ளி மாணவனுக்கு மதிப்பெண் குறைவதினால் மட்டும் தான் படிப்பில் கவனம் செலுத்துகிறான். உடல் அடிக்கடி கெடுவதினால் தான் உடல் ஆரோக்கியத்தின் மீது உடற்பயிற்சியின் மீது அக்கறை செலுத்துகிறோம்.

வருமானம் குறைவதினால் தான் வருமானத்தை உயர்த்த வெவ்வேறு புதிய தொழில் வழிமுறைகளை பின்பற்றுகிறோம். சொந்தங்களில் அவமானம் ஏற்படுவதினால் தான் உறவுகள் மத்தியில் உயர்ந்து நிற்க வேண்டும் என்று செயல்படுகிறோம்.

நமக்கு ஏற்படும் மனப்பாதிப்புக்கு எதிராக செயல்பட்டால் அது நம்மை முடக்கி போட்டுவிடும். இப்படி இன்ஜினியர் தனக்கு ஏற்பட்ட மனக்கொதிப்பிலிருந்து விடுபடவேண்டும் என்று போராடியதால்தான் ஒன்றன்பின் ஒன்றாக கெட்டு போய் மது கெடுதல் என்று தெரிந்தே மது குடித்து ரிலாக்ஸ் செய்து கொள்ளும் நிலைமைக்கு சென்றுவிடுகிறார்.

மனக்கொதிப்புக்கு காரணமான புறப்பிரச்சனையை எந்த வகையில் புதிய அணுகுமுறையில் திறம்பட அணுகி புதிய முறையை கையாண்டு தனக்கு கீழே வேலை பார்ப்பவர்களிடம் திறமையாக பேசி "ஆடுகிற மாட்டை ஆடி கறக்க வேண்டும்; பாடுகிற மாட்டை பாடி கறக்க வேண்டும்" என்ற பழமொழிக்கு ஏற்ப அவர்களின் மனநிலைக்கு இறங்கி போய் அதே நேரத்தில் நமக்கு நஷ்டம் ஏற்படாதபடி சிறப்பாக செயல்படும் கலையை இன்ஜினியர் கற்றுக்கொள்ள வேண்டும்.

மனக்கொதிப்பை எதிர்க்கும் போது அது நம்மையே முடக்கிவிடும். மனக்கொதிப்பை புறச் செயலுக்கான தூண்டுகோலாக எடுத்துக்கொள்ளும் போது வளர்ச்சி ஏற்படும்.

ஸ்ரீ பகவத் ஐயா அவர்களின் மதுரை வருகை

ஸ்ரீ பகவத் ஐயா அவர்கள் ஒவ்வொரு மாதத்திலும் இறுதி பத்து நாட்கள் மதுரை, திருப்பரங்குன்றம், லைன் சிட்டி நகரில் உள்ள தனது இல்லத்தில் தங்கி இருப்பார்கள். அது சமயம் ஐயாவை சந்திக்க விரும்புபவர்கள் முன் அனுமதி பெற்று ஐயாவை நேரில் சந்திக்கலாம்.

முன் அனுமதிக்கு : **99442 15677, 97891 65555, 99942 05880**

புதிய வரவு


களமிறங்க மறுத்து காண்டீப வில்லைக்
கைவிட்ட அர்ஜுனனைக் களமிறங்கக் கூறி
ஸ்ரீ கிருஷ்ணர் உபதேசித்தது அன்றைய
ஸ்ரீமத் பகவத் கீதை.

களமிறங்க மறுத்து அதி நவீன ஆயுதங்களைக்
குவித்துப் போட்டிருக்கும் இன்றைய
இராணுவத்தைக் களமிறங்க உபதேசிக்கப்
பட்டதுதான் இந்த பகவத் பாதை!!!

- ஸ்ரீ பகவத்

ஸ்ரீ பகவத் ஐயா அவர்களின் புதிய நூல்

"பகவத் பாதை"



இப்புதிய நூல் டிசம்பரில் வெளிவர உள்ளது. 'பொது அமைதி' என்ற தலைப்பில் வெளியிடுவதாக இருந்த இந்நூல் 'பகவத் பாதை' என மாற்றப்பட்டுள்ளது. விடுதலைக்காகப் பல நூல்களை எழுதிய ஸ்ரீ பகவத் ஐயா அவர்கள் புற ஒழுங்குக்காகவும் சமுதாய நலனுக்காகவும் எழுதிய நூல் தான் பகவத் பாதை எனும் இந்தப் புதிய நூல்.

சமுதாய அவலங்களைப் படம் பிடித்துக்காட்டும் இந்நூல். அவற்றுக்கான தீர்வையும் வழங்குகிறது. இந்தச் சமுதாயத்தில் பல அவலங்கள் நடந்து வருகின்றன. அநீதியாலும் அதிகார வர்க்கத்தாலும் பல வகையிலும் பாதிப்படைந்து வருகிறோம். ஆனால் அதற்கான எதிர்ப்பை தனிமனிதனாகக் காட்ட முடியாத சூழல்.

ஒரு சிலர் எதிர்ப்பைக் காட்டினாலும் அது வன்முறையில் சென்று முடிகிறது.

பிறகு எப்படித்தான் தீர்வு காண்பது?

நம்மால் என்னதான் செய்து விடமுடியும்?

இப்படி நமக்கு ஏற்படும் பாதிப்பையே, அந்த பாதிப்பினால் ஏற்படும் உந்து சக்தியாகப் பயன்படுத்தி நம்முடைய சமூக அமைப்பையே மாற்றியமைக்கும் சமுதாய மாற்றத்திற்கான தீர்வை வழங்குகிறது இந்நூல்.

சமுதாய நலனுக்காக வெளிவர இருக்கின்ற இந்நூலை குறைந்த விலையில் எல்லோருக்கும் கொண்டு சேர்க்க ரூபாய் 10000/- வழங்கும் இருபது நன்கொடையாளர்கள் தேவைப்படுகிறார்கள்.

இதுவரை நன்கொடை வழங்கி தங்களை இணைத்துக்கொண்டவர்கள் :

1. திரு. **குணாலன்,** கோவை
2. திரு. **கார்த்திகேயன்,** சிங்கப்பூர்
3. திரு. **ஜெயராம்,** கனடா
4. திரு. **சேகர்,** துபாய்
5. திரு. **தண்டபாணி,** சிங்கப்பூர்
6. திருமதி **முத்துலட்சுமி,** சென்னை,
7. திரு. **முருகவேல்,** சென்னை,
8. திரு. **சதானந்தம்,** திருச்செங்கோடு
9. திரு. **Dr. மணவாளன்,** சிதம்பரம்
10. திரு. **சீத்தல்குமார்**
11. இவர்களுடன் பெயர் தெரிவிக்க விரும்பாத சென்னையை சேர்ந்த ஓர் அன்பர்.

ஆர்வமுள்ளவர்கள் இச்சமுதாயத் தொண்டில் தங்களையும் இணைத்துக் கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம். **"Sri Bagavath Mission"** என்ற பெயரில் **M.O.** அல்லது சேலத்தில் செல்லத்தக்க **D.D. (or) Cheque** மூலம் அனுப்பலாம். வங்கிக்கணக்கில் நேரடியாக செலுத்துபவர்கள் : **HDFC Bank - Sri Bagavath Mission, A/c No. 15907620000075, NEFT IFSC : HDFC 0001590** என்ற கணக்கில் செலுத்தலாம்.

Bank A/c ல் நேரடியாக செலுத்தியவர்கள் **97891 65555** என்ற எண்ணிற்கு தகவல் தெரிவிக்க வேண்டுகிறோம்.

அன்புடன்



Sri Bagavath Mission

ஆசிரியர் பகுதி

K.S. ஜீவமணி
செல் : 97891 65555

அனைவருக்கும் சகப்பயணியின் வணக்கம்.

நாம் அனைவருமே வாழ்வில் உயரவேண்டும், வெற்றி பெற வேண்டும் என்று முயன்று வருகிறோம். நாம் அனைவரின் முயற்சியுமே வெற்றியை நோக்கியே அமைந்துள்ளது. இதில் வெற்றியாளர்கள் வெகு சிலரே. தோல்வி அடைபவர்களும் அடைந்து கொண்டிருப்பவர்களுமே அதிகம். தோல்விக்கான காரணிகள் பலவாக இருந்தாலும் அவற்றில் அதி முக்கியமானது அவர்களின் அக பிரச்சினைகளும் அகப்போராட்டங்களுமே ஆகும்.

அகப்பிரச்சினையில் இருப்பவர்களால் புறத்தில் திறம்பட செயல்பட முடியாது. அவர்களின் அகப்போராட்டமே புறச்செயலுக்கான ஊக்கத்தை குறைத்துவிடும். அவர்களின் ஆற்றலை அகப்போராட்டமே அழித்துவிடும்.

மன வேதனைக்கும் பிரச்சினைக்கு [illegible] காரணங்கள் இருக்கலாம். 'அதிகமாக [illegible]ரும்பி எதிர்பார்த்த ஒன்று நடக்காமல் போ[illegible]ருக்கலாம், வேண்டப்பட்டவர்களை இழந்திருக்க[illegible]ம், செய்யாத குற்றத்திற்காக தண்டனையை அனு[illegible]வித்திருக்கலா[illegible] மற்றவர்களால் அவமானப்பட்டிருக்க[illegible]ாம்'.

- இப்படி ஏதோ ஒரு காரண[illegible]ங்களால் ந[illegible] உணர்வுகளில் வலி ஏற்பட்டிரு[illegible]கலா[illegible] ஏற்படும் மன உணர்வுகளின் [illegible] உண்மையான பாதிப்பு. புறத்தில் பிர[illegible] அது மன உணர்வை பாதிக்கவில்லை[illegible] அதனை பாதிப்பு என்றே குறிப்பிடமாட்டே[illegible]ம்.

இப்படி வாழ்வில் ஏற்படுகின்ற [illegible]கபட்ச வலியும் வேதனையும் மனம் சார்ந்தவையாகத்தா[illegible] இருக்கிறது. உடல் வேதனைகளை எளிதாக எதிர்கொள்ள முடிந்த பலரால் கூட மன வேதனையை எதிர்கொள்ள முடியவில்லை. மன வேதனையோடு போராடும் போராட்டத்தின் உச்சத்தில்தான் மனிதர்கள் தங்களையே மாய்த்துக் கொள்கிறார்கள்.

உண்மையில் மனவேதனையையும் பிரச்சினையையும் எதிர்த்து போராடுவதால் மட்டுமே அவை அதிகரிக்கிறது.

மன வேதனையோ அல்லது தோல்வியோ அதனோடு போராடுவதை விட அது இயற்கையானது, முடிந்து போன ஒன்று என முழு மனதோடு ஏற்றுக்கொள்வதே சரியானது. அப்படி ஏற்றுக்கொள்ளும்போது மட்டுமே தோல்வியிலிருந்தும் கூட பாடம் கற்றுக்கொள்ள முடியும்.

நமக்கு ஏற்பட்ட மனவேதனையை, மனவலியை இயற்கையானது என ஏற்றுக்கொள்ளும்போது அவற்றையும் கடந்துபோய் விடுகிறோம். அதேபோல் நமக்கு எற்பட்ட தோல்வியை முழு மனதோடு ஏற்றுக்கொள்ளும்போது தான் நமது செயலில் உள்ள குறைகளை நம்மால் கண்டுகொள்ள முடியும். அப்போதுதான் குறைகளை களைந்து திறம்பட செயலாற்ற முடியும்.

நமக்கு ஏற்பட்ட துயரமோ தோல்வியோ முடிந்து போன ஒன்றாக ஏற்றுக்கொள்ளும் போது மட்டுமே அதிலிருநது விடுபடுவதற்கும் அதனை அடுத்து சரியாக செயல்புரிவதற்கும் வாய்ப்பாக அமையும்.

முடிந்துபோன ஒன்றை முடிந்ததாக ஏற்றுக் கொள்வதற்கான புரிதலை கொடுப்பதே ஞானம்.

ஞான[illegible] பெற்றவர்களே மனதோடு போராடும் நி[illegible]ருந்து விடுபட்டு அதே மனதை [illegible]ய[illegible]கு பயன்படுத்தும் தகுதிக்கு வந்து [illegible]ற[illegible].

[illegible]கவத் ஐயா வழங்கும் ஞானப் புரிதலின் [illegible] வேதனையால் தன்னையே மாய்த்துக் [illegible]ளும் தற்கொலை மன நிலையில் [illegible]ந்தவர்களு[illegible] மனப் பிரச்சினைக்காக பல நாட்கள் மருந்து எடுத்[illegible]க் கொண்டவர்களும் கூட விடுபட்டு விடுதலை அ[illegible]டைந்திருக்கின்றனர்.

நாம் இச்சமுதாயத்திற்கு எதை வழங்கினாலும் அது கால[illegible]போக்கில் குறைந்தோ அல்லது அழிந்தோ போய்[illegible]டக் கூடியதாகத்தான் இருக்கும். ஆனால் [illegible]னம் அப்படி அல்ல. அதை பெற்றவர்கள் அவர்களின் வாழ்நாள் முழுவதும் அவர்கள் எதிர்கொள்ளும் துயரங்களையும் பிரச்சினைகளையும் எளிதாக எதிர்கொள்வதற்கும் கடந்து செல்வதற்கும் பேருதவியாக அமைவதோடு நிறைவான வாழ்வுக்கும் வழிவகுப்பதாக அமைந்து விடுகிறது.

எனவே தான் நாம் மாதந்தோறும் ஞானமுகாம் நடத்தி அதன்மூலம் பலருக்கும் ஞானத்தெளிவை வழங்கி வருகிறோம்.

அந்த வகையில் செப்டம்பர் மாதம் 9 மற்றும் 10ஆம் தேதியில் இரண்டுநாள் ஞானமுகாம் மிகச்சிறப்பாக நடைபெற்றது. இதில் 85 அன்பர்கள் கலந்து கொண்டார்கள். மேலும் வருகின்ற அக்டோபர் மாதம் 14 மற்றும் 15 ஆம் தேதியில் இரண்டுநாள் ஞான முகாம் நடைபெற உள்ளது. தெளிவுபெற்ற அன்பர்கள் தேடுதல் உள்ள புதிய அன்பர்களுக்கு இதனை அறிமுகப்படுத்தி அவர்களுக்கும் பயன்பெற

செய்யுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

பகவத் பாதையின் மூலம் பலர் தெளிவை பெற்று கவலைக்கு விடுதலை கொடுத்து கர்ம வீரர்களாக திகழ்கிறார்கள்.

பகவத் பாதை இன்னும் பல இல்லங்களை அடைந்து அனைவரையும் சுபிக்ஷம் பெறச் செய்வதே நமது நோக்கமாக கொள்வோமாக.

ஸ்ரீ பகவத் பவன் – புரவலர்கள்

அன்பு உள்ளங்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்.

ஸ்ரீ பகவத் மிஷன் என்பது பணப்புழக்கம் மிகுந்த ஒரு கார்ப்பரேட் நிறுவனம் அல்ல. கட்டணம் வாங்கிக் கொள்ளும் கல்வி நிறுவனமும் அல்ல. ஐயா அவர்களுக்கு தங்கியிருக்க வீடு ஒன்று தேவைப்பட்டது. நம் அனைவரது ஒத்துழைப்பாலும் **ஸ்ரீ பகவத் பவன்** உருவானது. தற்போது அந்த இல்லம் ஐயாவின் இருப்பிடமாகவும், கற்றிட வருவோரின் குருகுலமாகவும், நம் அனைவரது பண்ணைவீடாகவும் செயல்பட்டு வருகிறது. ஸ்ரீ பகவத் பவனின் நித்திய நிர்வாகச் செலவினங்களுக்கான நித்திய நிதி ஒன்றும் தேவைப்படுகிறது.

'நிரந்தர வைப்பு நிதி எதனையும் தற்போது உருவாக்க வேண்டாம்' என்று ஐயா கூறிவிட்டதால் நிரந்தரப் புரவலர் குழு ஒன்றை உருவாக்க முடிவு செய்துள்ளோம். முதற்கட்டமாக 100 ஆர்வலர்கள் கொண்ட புரவலர் குழு ஒன்று மே மாதம் முதல் தொடங்கப்பட்டுள்ளது. அதன்படி ரூ. 1000/- முதல் ஏதாவது ஒரு தொகையை மாதந்தோறும் அல்லது ரூ. 12,000/- முதல் ஏதாவது ஒரு தொகையை வருடந்தோறும் வழங்கும் ஆர்வம் உள்ளவர்கள் தங்களை ஸ்ரீ பகவத்பவனின் புரவலர்களாக இணைத்துக் கொள்ளலாம். **அதற்காக ஏற்றுக்கொண்ட முழுத்தொகையையும் மாதந்தோறும் வழங்கியே ஆகவேண்டும் என்ற நிபந்தனை எதுவும் புரவலர்களுக்குக் கிடையாது.**

நமது வேண்டுகோளை ஏற்று புரவலர்களாக இணைந்தவர்கள் :

1. திரு. **சரவணன்,** புரசைவாக்கம், சென்னை.
2. திரு. **விரன்சுப்பு** (எ) **இராஜேஷ்.** புதுக்கோட்டை.
3. திரு. **கணேஷ்,** கோவை
4. திருமதி **முத்துலட்சுமி சரவணன்,** சென்னை
5. திரு. **இரகு,** கிருஷ்ணகிரி
6. திரு. **அஃகு ஹீலர் உமர் ஃபாரூக்,** கம்பம்
7. திரு. **சேகர்,** கத்தார்
8. திரு. **குணாலன்,** கோவை
9. திரு. **சம்பத்,** சென்னை
10. திரு. **வெங்கட்ராமன்,** சென்னை
11. திரு. **இராஜகோபால்,** பரமத்தி வேலூர்
12. திரு. **பாலசுப்ரமணி,** பரமத்திவேலூர்
13. திரு. **பாரதிராஜா,** பரமத்திவேலூர்
14. திரு. **பாபுலால்,** பெங்களூர்
15. திரு. **முரளி,** சென்னை
16. திரு. **வீரப்பன்,** நெல்லை
17. திரு. **அருணாச்சாலம்,** நெல்லை
18. திருமதி **நிருபமா ஸ்ரீநாத்,** சென்னை
19. திருமதி **வடிவம்மாள்,** சென்னை
20. திரு. **ஹீலர் சுரேஷ்,** சென்னை
21. திரு. **ஹரி கிருஷ்ணன்,** சென்னை
22. திரு. **ஸ்ரீபகவத்மிஷன்,** வெஸ்ட்மாம்பலம் சத்சங்கம்
23. திரு. **கார்த்திக்,** போரூர், சென்னை
24. திரு. **ஆனந்த் V. ராயன்,** திருச்செந்தூர்
25. திரு. **யுகேஷ்குமார்,** சென்னை
26. திரு. **P. சௌந்தரராஜன்,** சென்னை
27. திரு. **D. சந்திரசேகர்,** சென்னை
28. திரு. **நந்தகோபால் நாராயணன்** USA
29. திரு. **பாபு,** காட்பாடி, வேலூர்
30. திரு. **K. முருகானந்தன்,** திருப்பூர்
31. திரு. **P.R. குமார்,** எர்ணாகுளம்
32. திருமதி **மாலா மங்களேஸ்வரன்,** லண்டன்
33. திரு. **செந்தில் ஜெயபாலன்,** பெங்களூரு
34. திரு. **Javis Arul jeraid Arul Samy,** Dubai
35. திரு. **பாண்டிபரமசிவம்,** சென்னை
36. திரு. **T.M.K. தியாகராஜன்,** சென்னை
37. திரு. **A. ராஜமாணிக்கம்** (MRS Yarns) சேலம்
38. திரு. **இரவிச்சந்திரன்,** வெஸ்ட்மாம்பலம், சென்னை
39. திரு. **பாலமுருகன்,** USA
40. திருமதி **சுரபி,** டெல்லி
41. திரு. **முருகவேல்,** சென்னை
42. திரு. **சதானந்தம்,** திருச்செங்கோடு

புரவலர்களாக தங்களை இணைத்துக்கொண்ட அனைவருக்கும் ஸ்ரீபகவத் மிஷன் சார்பில் உளமார்ந்த நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறோம். வாய்ப்புள்ளவர்கள் புரவலர்களாக இணைந்து உதவிட வேண்டுகிறோம்.

வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்துபவர்கள் **HDFC Bank Sri Bagavath Mission A/c No. 1590762000075, NEFT IFSC : HDFC 0001590 Car Street Branch, Salem** என்ற கணக்கில் செலுத்தலாம். **Bank A/c-** ல் நேரடியாக செலுத்தியவர்கள் தகவலை **97891 65555** என்ற எண்ணிற்கு தெரிவிக்க வேண்டுகிறோம்.

நிகழ்ச்சி நிழல்கள்



செப்டம்பர் ஞான முகாமில் கலந்து கொண்டவர்களுடன் ஐயா...



காலையில் அன்றைய செய்தித்தாளுடன்...



காலை நேர பயிற்சியின் தொடக்கத்தில்



கன்றுக் குட்டிக்கு உணவளிக்கும் போது...



பகவத் ஐயாவின் பிறந்த நாளுக்கு பாலகன் கார்த்தியின் பரிசு



கோவை அன்பர்களுடன் மலை உச்சியில்..



ஸ்ரீ பகவத் பவனுக்கு அருகில் வனப்பகுதியில் நடைபயிற்சியின்போது..



ஜென் கதை

குரங்குப்பிடி

இளைஞன் ஒருவன் ஓர் ஞானியை சில காலமாக தொடர்ந்து சந்தித்து வந்தான். அவரின் வழிமுறைகளை, பயிற்சிகளை பின்பற்றி வந்தான். அதனால் வாழ்க்கையில் பல நல்ல மாற்றத்தை அடைந்தான். ஆனாலும் அவனது மனதில் தேவையற்ற பயமும், தாழ்வு மனப்பான்மையும் எதிர்காலத்தை பற்றிய கவலையும் தொடர்ந்து கொஞ்சமும் குறையாமல் அவனை மிகவும் துன்புறுத்தின. அவனும் பயம், தாழ்வு மனப்பான்மை கவலையிலிருந்த விடுபட முயன்றான். ஆனால் வழி தெரியவில்லை. மீண்டும் ஞானியை சந்தித்து "உங்களால் எனக்கு நிறைய மாற்றம் கிடைத்துள்ளது. ஆனாலும் மனதில் உள்ள பயம், எதிர்காலத்தை பற்றிய கவலையிலிருந்து மட்டும் எவ்வளவு முயன்றும் விடுபட முடியாமல் தவிக்கிறேன். அது ஏன்? எனக்கு நீங்கள் தான் உதவ வேண்டும்" என்றான்.

ஞானி அவனை அழைத்துக் கொண்டு காட்டிற்கு சென்றார். வேடன் ஒருவன் குரங்கை பிடிப்பதற்காக காட்டிற்கு வந்திருந்தான். ஞானி இளைஞனிடம் “வேடன் குரங்கை எப்படி பிடிக்கிறான் என்பதை கவனி” என்றார்.

வேடன் ஒரு தேங்காயின் குடிமியை நீக்கிவிட்டு குரங்கின் கை மட்டும் உள்ளே புகும்படி ஒரு துவாரம் போட்டான். அந்த துவாரத்தில் குரங்கிற்கு மிகவும் பிடித்த பழங்களை முக்கால் பகுதிக்கு நிறைத்தான். பிறகு அந்த பழங்களை கொண்ட தேங்காயை ஒரு மரத்தில் நன்றாக சேர்த்து கட்டி வைத்தான். பிறகு அந்த இடத்தை விட்டு தள்ளிச் சென்றான்.

சற்று நேரத்தில் ஒரு குரங்கு வந்து அந்த தேங்காய் துவாரத்தில் கையைவிட்டு அதற்கு மிகவும் பிடித்த பழங்களை கையால் பற்றி பிடித்தது. பழங்களை பற்றி பிடித்தால் குரங்கினால் தேங்காயிலிருந்து கையை வெளியே எடுக்க முடியவில்லை. குரங்கு பழங்களை விடாமல் பிடித்துக்கொண்டு கையை வெளியே எடுக்க எல்லா முயற்சிகளையும் செய்து. அதனால் கைகளை கடைசி வரை வெளியே எடுக்கவே முடியவில்லை. வேடன் குரங்கிற்கு அருகில் நிதானமாக வந்து எந்த சிரமமும் இன்றி பிடித்து சென்றான்.

ஞானி இளைஞனை பார்த்து “வேடன் குரங்கை பிடித்ததிலிருந்து என்ன புரிந்து கொண்டாய்?” என்று கேட்டார்.

"குரங்குதான் பிடித்துக்கொண்டு இருக்கிறது என்பது நன்றாக தெரிந்தது. குரங்குதான் கையை விட வேண்டும் என்பதும் புரிந்தது. குரங்கு பழங்களை பிடித்துக் கொண்டால் தான் வேடனிடம் மாட்டிக்கொண்டது" என்றான்.

"இதே போல் தான் உன் பிரச்சனையும்" என்றார் ஞானி.

"அப்படி என்றால் நான்தான் உணர்வுகளை பற்றி பிடித்துக்கொண்டு போராடுகின்றேனா?" என்றான் அவன்.

"ஆமாம் நீ பற்றி பிடித்துக்கொண்டு போராடுவதால் மட்டும் தான் அந்த உணர்வுகள் உன்னிடம் தங்கி இருக்கின்றன. நீ விட்டுவிட்டால் அவைகளும் உன்னை விட்டுவிடும்" என்றார் ஞானி.

“நான் தான் உணர்வுகளை பற்றிப்பிடிக்கிறேன் என்பது எனக்கு தெரியும் போது அதிலிருந்து விடுபடுவதில் எந்த பிரச்சனையும் இல்லை. ஆனாலும் எனக்கே தெரியாமல்தான் அவற்றை பற்றி பிடித்துக் கொள்கிறேன். அதிலிருந்து விடுபடுவதற்கு என்ன செய்வது?" எனக் கேட்டான்.

"தேங்காயில் கையை மாட்டிக்கொண்டு வலிக்கும்போதும் குரங்கிற்கு பழத்தை விடவேண்டும் என்ற அறிவு கிடையாது. ஆனால் உனக்கு உன் வலியை உணரும்போது நீ அந்த உணர்வின் பிடியிலிருந்து விடுபடலாம் தானே?" என்றார் ஞானி.

இளைஞனுக்கு மண்டையில் சுளீர் என்று ஏதோ உறைந்தது. பிடி தளர்ந்தது. மனபாரம் மறைந்தது.

Registration Number of the News Paper TNTAM/2014/57698 Postal Registration Number : TN/WR/SLM(E)/22/2015-2017

Published by Shri. V. A. P. Sharavanan on behalf of the Sri Bagavath Mission, 31, Ramalingasamy Street, Ammapet, Salem-636 003. Tamilnadu, India.
Printed by Shri. R. Jayavel at Sree Jayavel Press, 08/11, Gandhi Maidanam, Ammapettai, Salem-636 003.
Editor : Shri. K. S. Jeevamani, Cell : 97891-65555